# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

# MCOP No.167/2019

| | | |
|---|---|---|
| சாட்சி | - | மா.சா.3 |
| பெயர் | - | திரு.நேதாஜி |
| தந்தை பெயர் | - | சண்முகம் |
| முகவரி | - | குடியாத்தம் |
| தொழில் | - | மாட்டு வியாபாரம் |
| வயது | - | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.02.2026.**

**முதல் விசாரணை-**

1) நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி. என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் பிரமாணமாய் கூறப்பட்டவையாகும். அதை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை-

நான் இறந்துபோன ஈஸ்வரன் வழக்கிற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன். ஈஸ்வரனுக்கு 18 வயது தான். இறந்துபோன ஈஸ்வரனுக்கு நான் உறவுகாரனும் கிடையாது ஊர்காரரும் கிடையாது. 30.05.2018 அன்று விபத்து நடந்தது. என்னுடைய ஊர் குடியாத்தம். விபத்து பரதரம்மி சித்தூர் ரோட்டில் நடந்தது. குடியாத்தத்திற்கு பரதரம்மி காட்பாடி வழியாக வரமாட்டேன். நான் பரதரம்மி திருவிழாவை பார்த்துவிட்டு பரதரம்மி வழியாக குடியாத்த்ம் போகவில்லை என்றம் காட்பாடி வழியாக தான் குடியாத்தம் போனேன் என்றால் சரியல்ல. நான் வேறு எந்த இந்த விபத்து குறித்து

சாட்சியம் அளிக்கவில்லை. காத்தவராயன் விபத்து வழக்கு சாட்சி சொல்ல கூப்பிட்டதால் நான் சாட்சி சொல்ல வந்தேன். காத்தவராயன் அவருக்கு தெரிந்தவர் மூலமாக தொடரப்பு கொண்டார். தெரிந்தவர் ராஜேந்திரன் மகன் முனுசாமி. முனுசாமியினுடைய விலாசம் பரதரம்மி என்று சொன்னார்கள். விபத்து சமயத்தில் நான் சென்ற வண்டி நம்பர் என்ன என்றால் எனது நண்பர் ஓட்டிச் சென்றார் நான் பின்னால் உட்கார்ந்து போனேன். இறந்துபோனவர் என்ன வண்டி ஓட்டி போனார் என்று தற்போது நினைவில்லை. நின்று கொண்டிருந்த லாரி மீது இடித்துவிட்டார். லாரியின் பதிவு எண். TN-63-AQ-1919. விபத்து சமயத்தில் மின் விளக்குகள் எதுவும் இல்லை. நாங்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கும் ஈஸ்வரன் சென்ற இருசக்கர வாகனத்திற்கும் Head Light இல்லை என்றால் சரி. ஈஸ்வரன் ஓட்டிச் சென்றது Blue Colour Pulsar வண்டி. நான் விபத்தினை நேரில் பார்க்காமல் இறந்து போன ஈஸ்வரன் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

The Witness deposed on solemnly affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the 24th day of February 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 18:39:09 +0600

Additional District Judge(FTC),
Vellore.